DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு. சங்கரநாராயணன் | Father/Husband Name : சின்னபோத்தி |
| Age : 54 | Village : சிறுகுளம் |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01.06.2026.

(A1 to A4, A6, A7 present. A5 not present. Petition under Section 317 CrPC filed and allowed.)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் தற்போது சாத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் பணியாற்றிய தலைமை காவலர் திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.சதீஷ்குமார் ஆகியோர்களும் அவர்களுடைய கையெழுத்தும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 19.03.2022 ம் தேதி சாத்தூர் தாலுகா காவல் நிலைய தலைமை காவலர் திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சார்பு ஆய்வாளர் உத்தரவுபடி விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த தங்கவேலு மகன் சின்னத்துரை என்பவரை விசாரித்து அவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று 12.00 மணிக்கு நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 57/2022 பிரிவுகள் 147, 294(b), 323, 324, 355, 506(1) இ.த.ச -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.**<u>(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)</u>** முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

4. பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.சதீஷ்குமார் 19.03.2022ம் தேதி 13.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அமுதவள்ளி மற்றும் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **<u>(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>).** பின்னர் 14.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்த மஞ்சனத்தி கம்பு-1 மற்றும் உடைந்த செங்கல்-1 ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். **<u>(அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகவும், மஞ்சனத்தி கம்பு மற்றும் உடைந்த செங்கல் ஆகியவை அ.சா.பொ.1 மற்றும் 2 ஆகவும் குறியீடு செய்யயப்படுகிறது</u>).**

5. பின்னர் சாட்சிகள் சின்னத்துரை, கருப்பசாமி, லெவேசெல்வி, சுப்புலட்சுமி, தெய்வானை, கிருஷ்ணவேணி, அமுதவள்ளி மற்றும் குணசேகரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரது விசாரணையிலிருந்து எதிரி முருகேசன் என்பவர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்து மேற்படி எதிரி முருகேசனை நீக்கம் செய்து எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்துள்ளார். **<u>(எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)</u>**

6. பின்னர் சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் 19.03.2022–ம் தேதி 16.00 மணிக்கு பெரிய ஓடைப்பட்டி வன்னி விநாயகர் கோவில் அருகே நின்றிருந்த இவ்வழக்கு எதிரி முனியராஜ் என்பவரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மற்ற எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரில் முன்பிணையில் சென்ற விவரம் தெரியவந்துள்ளது.

7. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1–சின்னத்துரை மற்றும் அ.சா.2–கருப்பசாமி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பூபதிராஜேஸ்குமார் என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். **(சாத்தூர் அரசு மருத்துவமனையில் அ.சா.1–ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும், அ.சா.2 ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

8. பின்னர் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு மேல்சிகிச்சையளித்த விருதுநகர் மருத்துவமனை மருத்துவர் திரு.கார்த்திகேயன் அவர்களை விசாரணை செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். **(விருதுநகர் அரசு மருத்துவமனையில் அ.சா.1–ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.12 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.13 ஆகவும், அ.சா.2 ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.14 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.15 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் பிரைட் ஜசக் சுவாமிநாதன் அவர்களை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து பொருட்களை படிவம்–91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். (**படிவம்–91 அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

9. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324, 355, 506(1), 326 இ.த.ச –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

10. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2–க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் அத்தாட்சி மற்றும் வழக்கு சொத்துப்பொருள் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளுக்கு எதிராக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P.